# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

*(Re-Accredited with 'A" Grade by NAAC)*

*திருச்சிராப்பள்ளி - 620 024*

*முனைவர் க. துரையரசன்,* **M.A .,M.Ed.,M.Phil.,Ph.D.,**
*தேர்வு நெறியாளர்*

| | | |
|---|---|---|
| அலுவலகம் | : | 0431-2407016 |
| தொலைவரை | : | 0455-253 |
| தொலைப்படி | : | 0431-2407044 |
| தொலைவரி | : | "BARD" |
| மின்னஞ்சல் | : | coe@bdu.ac.in |
| வலைத்தளம் | : | w.w.w.bdu.ac.in |


---

ந.க. எண்.001/தே.நெ/ப.பி/36-வது பட்டமளிப்பு/2019 நாள் :01.08.2019

பெறுநர்

முதல்வர் / துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழக ஆளுகைக்குட்பட்ட
கல்லூரிகள் மற்றும் துறைகள்.

அய்யா/அம்மையீர்

பொருள்: முப்பத்து ஆறாவது பட்டமளிப்பு விழா 2019 பட்டம்/பட்டயச் சான்றிதழ் பெறுவதற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்புதல் மற்றும் பட்டமளிப்புக் கட்டணத்தை இணையவழியாக செலுத்தக் (Online payment) கோருதல் - தொடர்பாக.

-----

பல்கலைக்கழக முப்பத்து ஆறாவது பட்டமளிப்பு விழா விரைவில் நடைபெற உள்ளது. இந்தப் பட்டமளிப்பிற்கு *தங்கள் கல்லூரியில் பயின்று* ***Nov/Dec.2018*** *மற்றும்* ***April/May 2019-ல்*** *தேர்ச்சி* பெற்ற மாணவ/மாணவிகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அதற்குண்டான கட்டணத்தினை இணைய வழியாக செலுத்தி **(Online payment under the heading – Bulk payment by affiliated Colleges)** e-ரசீதுடன் **26.08.2019** தேதிக்கு முன்னதாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி (Instructions) தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

த.பி.பா.

பட்டமளிப்புக் கட்டணத்தை மாணவர்கள் வங்கி வரைவோலை (Damand Draft) **அல்லது இணையதளம் வழியாக** (Online Payment) **தனித்தனியே செலுத்தி அவற்றை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைப்பதை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.** மேலும் பட்டமளிப்பு விழா நடைபெறும் நாள் பற்றிய விபரக்கடிதம் பின்னர் அறிவிக்கப்படும். மேலும், குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் உடனடியாக பரிசீலிக்கப்பட இயலாது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் தரத்தேர்வில் (RANK EXAMINATIONS) **முதல் தரம்** (FIRST RANK) பெறும் மாணாக்கர்களுக்கு பட்டமானது ஒவ்வோர் ஆண்டும் பட்டமளிப்பு விழாவில் நேரடியாக (In-Person) வழங்கப்படுவதால், தங்கள் கல்லூரியில் **முதல் தரம்** (FIRST RANK) பெற்ற மாணாக்கக்களின் பூர்த்தி செய்யப்பட்ட பட்டமளிப்பு விண்ணப்பங்களைப் பட்டமளிப்புப் பிரிவில் தனியாக வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கடிதம் கிடைக்கப் பெற்றமைக்கு உடன் ஒப்புகைக் கடிதம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தேர்வு நெறியாளர்

**குறிப்பு:-** பட்டச் சான்றிதழுக்கான கட்டணத்தை தேர்வுக் கட்டணத்தோடு மாணவ / மாணவிகள் ஏற்கனவே செலுத்தியிருந்தால் மீண்டும் பட்டச்சான்றிதழுக்கான கட்டணம் செலுத்தத் தேவையில்லை. விண்ணப்பத்தை நிறைவு செய்து அனுப்பினால் போதுமானது.

**இணைப்பு:-** வழிமுறைகள் (INSTRUCTIONS)

**நகல்:** -1. இயக்குநர், தொலைக்கல்வி மையம்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024.
2. பல்கலைக்கழக தகவலியல் மையம்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024.
3. பல்கலைக்கழக மாணவர் கலந்தாய்வு மற்றும் குறைதீர்வு பிரிவு.
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024.
4. கணிணி மென்பொருளர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024.
5. ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024.
6. துணைப்பதிவாளர், 'A' Section
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024.